தடை செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ள காரணத்தினாலே, ஊராட்சிப் பகுதி மற்றும் நகராட்சி, பேரூராட்சிப் பகுதிகளிலே நெடுஞ்சாலைத் துறைமூலமாக பாலம் கட்ட இயலாத நிலை உள்ளது.

பேரூராட்சிப் பகுதிகளிலே நெடுஞ்சாலைத் துறைமூலமாக பாலம் கட்ட இயலாத நிலை உள்ளது. இதை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, அவர்களுடைய ஆணையைப் பெற்று, ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் பாலம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

30—

கிரிவலப் பாதை

***779—திரு. வெ. பொன்னுப்பாண்டி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலையைச் சுற்றி கிரிவலப் பாதை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலை அருள்மிகு சீனிவாசப் பெருமாள் திருக்கோயில் கிரிவலப் பாதையை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையின்பேரில் இந்த அரசு அமைத்துத் தரும் என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

திரு. வெ. பொன்னுப்பாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோதை பிறந்த ஊர், கோபாலன் வாழும் ஊர் என்று ஏழைகளால் அழைக்கப்படும் ஏழைகளின் திருப்பதி என்று போற்றப்படுகின்ற எனது ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள திருவண்ணாமலை பெருமாள் திருக்கோயிலைச் சுற்றி கிரிவலப் பாதை அமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏனைய இரண்டு வினாக்களும் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. சிறப்புக் கவன ஈர்ப்பு

இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே விமர்சித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழக சட்டமன்றப் பேரவையில் இலங்கைத் தமிழர்களுக்காக நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ஷே விமர்சித்துள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து தே.மு.தி.க. கட்சியைச் சார்ந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா ஆகியோர் சட்டப் பேரவை விதி 55-ன்கீழும், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் சட்டப்